முருகப்பெருமான் துணை

**மகான் பாம்பாட்டிச் சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.03.2024,** செவ்வாய்க்கிழமை

1. மாதருமபலம் உலகம் அடைய
மக்களிடை தயவுநிலை பெருக
பூதலத்தில் தரும சக்தியாக அவதாரம்
புண்ணியனாய் வந்த அரங்கனே
2. அரங்கனே உன் தருமபலம் மெச்சி
அறிவிப்பேன் துல்லிய ஆசி
வரங்களென சோபகிருது சேல்திங்கள்
வல்லமையுள சஷ்டிதிகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 06 ம் நாள், 19.03.2024, செவ்வாய்க்கிழமை)
3. வாரமதில் பாம்பாட்டிச்சித்தர் யானும்
வையகம் பாதுகாப்புற உரைப்பேன்
சோரமான பொய்புரட்டு களவு
சுயநலமான வஞ்சம் சூழ்ச்சி நடைமுறை
4. நடைமுறை எல்லாம் அப்பனே
நாட்டிடுவேன் கலியின் கொடுமை
இடரான பதுக்கல் சுருட்டலென
இந்தநிலை உலகில் தொடர்ந்தால்
5. தொடர்ந்தால் இயற்கை தானும்
தொல்லை தந்து புவிதன்னில்
இடர்படுத்தும் பிரளயம் நிலஅதிர்வு
ஏதேனும் தீய சக்தியாக வெளிப்பட்டு
6. வெளிப்பட்டு அழிவை தரநேரும்
வணிதை வடிவமான மாயையாகி
இழிவும் அழிவும் மிக்க நேரும்
இவ்வித அழிவுதனை தடுக்கும்வண்ணம்
7. வண்ணமுடன் மனித சமூகத்துக்கு
வள்ளலாக அரங்க மகானும்
அண்ணலாக அவதரித்து அருள
ஆதரித்து அரங்கன் உபதேச

8. உபதேச ஞானவழிகளை ஏற்றும்
உண்மைபட பாதுகாப்பை தரும்
அபயமென அன்னதான சேவைதனை ஏற்றும்
அகிலத்தார் அனுதினமும் இருவருக்கேனும்

9. இருவருக்கேனும் அன்னம் வழங்கி
எளிமைபட வாழ்க்கை முறையை
தருமவானாய் பிறர்க்கு தீங்குதரா
தயவான தவவாழ்வாய் கடைபிடிக்க

10. கடைபிடிக்க கலியின் வேகம்
கரைந்தோடி சத்திய ஞானயுக
சோடையிலா பாதுகாப்பு மிக்க
சுபிட்சமான காலமாக மாற்றம் கண்டு

11. கண்டுமே அரங்கன் வந்தநல்
கலியுகத்தில் அவதார நோக்கம்
கொண்டுரைக்க பூர்த்தி காணும்
கூறிவந்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–